## ★ குடமுழுக்கில் வரலாறு படைத்த ஆட்சி! 3000 கோவில்களுக்கு குடமுழுக்குகள்!

## ★ 11,666 கோவில்களுக்கு திருப்பணிகள்! உலகிலேயே பெரிய 184 அடி உயர முருகன் சிலை!

# அறநிலையத் துறையைக் கோபுரக் கலசமாய் வானுயர்ந்து நிற்க வைத்துள்ளார் முதல்வர்!

## பேரவையில் – அறநிலையத்துறை மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில்

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு சாதனை படைக்கும் 210 அறிவிப்புகளை வெளியிட்டார்!

**சென்னை,ஏப்.18-**

**“அறநிலையத்துறையை கோபுரக்கலசமாய் வானுயர்ந்து நிற்க வைத்துள்ளார் நமது முதல்வர் அவர்கள்” என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் நேற்று (17.4.2024), சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் உரையாற்றும் போது 210 அறிவிப்புகளை வெளியிட்டு பெருமிதத்துடன் கூறினார்.**

அமைச்சர் பி.கே. சேகர் பாபு அவர்கள் பேசியதாவது:

அவைத் தலைவரின் சிகரமே! நீங்கள் அமர்ந்திருந்தாலும் உயரமே! அம்பலத்தில் ஆடி வென்றார் அன்று தில்லை சபாநாயகர், நீங்களோ, எங்கள் முதல்வரின் பலத்தால் ஆடி வென்ற நீங்கள் நெல்லை சபாநாயகர். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு பேரன்பான வணக்கம். இந்த அறநிலையத் துறையிலே காணக் கிடைக்காத ஒரு அற்புதக் காட்சி, மடாதிபதிகளே மாடத்தில் நின்று இந்தத் துறையை வாழ்த்திக் கொண்டிருக்கிற ஒரு சிறப்புக் காட்சி இந்தத் திராவிட மாடல் ஆட்சியில்தான் நடக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மதத்தை ஏற்றவர்கள் இன்னொரு மதத்தை அவமதிப்பது மனித நேயத்திற்கு எதிரானது என்று சொல்லி, மதவாதிகளை அடித்து நொறுக்கிய பெரியாரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலும், மதமும் கலப்பதா என்பதல்ல என்னுடைய கேள்வி. மதத்தை வைத்து மக்களை அரசியல் அடிமையாக்குவதுதான் இழிவு என்று அன்றே கணித்த இந்திய திருநாட்டின் இங்கர்சால் பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மனிதனை இழிவுப்படுத்தாத வரையில் மதம் என்பது யானைக்கு வரும் சினம் போல் என்றார் அன்று மதவாதத்தை எதிர்ப்பதில் எப்போதும் உறுதியாய் இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சூரியனிலிருந்துதான் பூமி தோன்றியது என்பார்கள் விஞ்ஞானம். இங்கே, பூமியிலிருந்து ஒரு சூரியன் தோன்றியது அதுதான் திராவிட மாடல் முதல்வர் எங்கள் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

### சரித்திரத் தலைமகன் நமது முதல்வர்!

தங்களை அதிகாரம் மிக்கவர்களாக நினைத்து மசோதாக்களை நிறுத்தியவர்களை சட்டப்போராட்டத்தால் வென்று ஜனநாயகத்தை மீட்டுத் தந்த சரித்திரத்தின் தலைமகனே, பல்கலைகழகங்களின் வேந்தரே உங்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மூவேந்தர் ஆண்ட முத்தமிழ் திருநாட்டை ஒருசேர ஆட்சி செய்யும் வேந்தரே, எங்கள் முதல்வரே வணங்குகிறேன் உம்மையே. பொன்னேர் பூட்டி உழுதாலும் பூமித்தாய் தருவதைத்தான் தருவாள். ஆனால், எங்கள் தன்னேரில்லா தலைவரே தாயினும் மேலாய் எல்லோர்க்கும் எல்லாம் தரும், இன்னார் இனியார் என்று பாராத தங்கள் பொன்னான மனதை கசிந்துருகி வணங்குகிறேன்.

### சேகுவேராவைப் போல இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் துணை முதல்வர்!

உங்கள் கனவுகளை நம்புங்கள் எதுவும் சாத்தியமாகும் என்றார் மின்னல்வேக மனிதர் உசைன் போல்ட். ஆம், நமது விளையாட்டுத் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தி இளைஞர்களின் கனவுகளை நனவாக்கும் தமிழ்நாட்டின் மின்னல் வேக மனிதர் நம் துணை முதல்வர் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) விளையாட்டுத் துறையில் சாம்பியன்களை உருவாக்கும் சாம்பியனாக இருக்கின்றார் நம்முடைய துணை முதல்வர் அவர்கள். எங்கெல்லாம் மக்கள் ஒடுக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் என் கால்கள் பயணிக்கும் என்றார் உலக இளைஞர்களின் நட்சத்திரம் சேகுவேரா. சேகுவேராவைப்போல் தமிழக இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக தன்மான அஞ்சாமை, தமிழ்மான அஞ்சாமை, தன்மான கெஞ்சாமை, இளைஞர்நல மேலாண்மை, எதிர்ப்பை வெல்லும் பேராண்மை இத்தகைய மேன்மையான குணங்களைக் கொண்ட துணை முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒரு வணக்கம். ஒரே நாடு ஒரே தேர்தல் இது ஒன்றியத்தின் கூப்பாடு. எங்கே எங்களின் நிதி ஒதுக்கீடு என்று கேட்கிறது முதல்வரின் தமிழ்நாடு. இந்த கடினமான நான்காண்டு இதை கவனமாக கையாண்டு சோதனையில் நின்று தினம் தினம் வென்று சரித்திரம் படைத்த எங்கள் முதல்வர் அவர்கள் பல்லாண்டு வாழ்க. (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் முதல்வருக்கு ஆட்சியில் சாதிக்கவும் தெரியும் அரசியலை போதிக்கவும் தெரியும். ஏன், அறநிலையத் துறையை அறமாக வழிநடத்தவும் தெரிந்த முதல்வர் எங்கள் முதல்வர் அவர்கள். ஆண்டவனுக்கும் தெரியும் இது பக்த கோடிகள் அனைவருக்கும் புரியும்.

நம் முதல்வரின் நான்காண்டுகளில்தான் அடையாளமின்றி இருந்த இந்த துறையை கோபுர கலசமாய் வானுயர்ந்து நிற்க வைத்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அறநிலையத் துறைக்கு இவர் ஆற்றிய சேவையை கண்டு தெய்வங்களே எங்கள் முதல்வருக்கு துணை நிற்கும். ஆம், வாக்குரிமை என்று ஒன்று தெய்வங்களுக்கு இருந்தால் அந்த வாக்கும் எங்கள் முதல்வருக்கே கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருத்தணிக்கு வரும் ஆந்திர பக்தர்கள் இன்றைக்கு

( அமைச்சர் அவர்கள் தெலுங்கில் பேசினார்.)

என்று இறைவன் வாழ தேர்ந்தெடுத்த இடம் தமிழ்நாடு என்று புகழ்கிறார்கள். பழனிக்கு வரும் கேரள பக்தர்கள்

( அமைச்சர் அவர்கள் மலையாளத்தில் பேசினார்.)

தெய்வங்களின் ஆசிர்வாதம் தமிழ்நாட்டிற்கே என்று புகழ்கிறார்கள். திருவண்ணாமலைக்கு வரும் கன்னட பக்தர்கள்

( அமைச்சர் அவர்கள் கன்னடத்தில் பேசினார்.)

அதாவது தெய்வீக தரிசனங்களுக்கு ஏற்ற தாய் வீடு தமிழ்நாடு என்று புகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இராமேஸ்வரத்திற்கு வருகின்ற வட இந்திய மக்கள் ( அமைச்சர் அவர்கள் இந்தியில் பேசினார்)

என்கிறார்கள். அதாவது “தமிழ்நாடு இறைவனின் இதயத்திற்கு நெருக்கமானது” என்று புகழ்கிறார்கள். உலகெங்கிலும் இருந்து வரும் பக்தர்கள் “Tamil Nadu is the greatest spiritual land” என்கிறார்கள். அதாவது, உலகத்திலேயே சிறந்த ஆன்மிக பூமி தமிழ்நாடு என்று புகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி பன்மொழி பேசும் மக்களின் வாழ்த்துகள் இன்முகத் தலைவர் முதல்வரின் ஆட்சிக்கு பெருமையிலும் பெருமை.

முதலாம் ஆண்டு மானியக் கோரிக்கைக்கு பிறகு, அடுத்த ஆண்டு வருகின்றபொழுது இங்கே பெருமையோடு நின்று துறையின் சாதனைகளைப் பேசினோம். அதைவிட இந்த ஆண்டு, பெருமையிலும் பெருமையாக நின்று பேசிக்கொண்டிருக்கின்றோம். 1,300 ஆண்டுகள் பழமைவாய்ந்த துக்காச்சி திருக்கோயிலுக்கு UNESCO விருது பெற்றுத் தந்த ஆட்சி, இந்த திராவிட மாடல் ஆட்சி என்பதை பெருமிதத்தோடு பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், 17 ஆண்டுகள் ஓடாமல் இருந்த கண்டதேவி தேரை அங்கிருக்கின்ற மக்களுக்கு இருந்த பிளவுகளை போக்கி ஒன்றுபடுத்தி, 17 ஆண்டுகளுக்கு பிறகு ஓடாத கண்டதேவி தேரை ஓட வைத்த பெருமை தமிழக முதல்வரை சாரும் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையுடனும், பூரிப்புடனும் பேசிக் கொண்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆட்சி செய்திருக்கின்ற சாதனைகளை ஒருசிலவற்றை பட்டியலிட்டுவிட்டு அறிவிப்புக்கு செல்கிறேன். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் என்பார்கள். திருக்கோயில் சார்பில் நடைபெற்ற அந்தத் திருமணங்கள் கடந்த 10 ஆண்டுகளாக தடைப்பட்டிருந்தது. தற்போது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 1,800 குடும்பங்களில் திருவிளக்கை ஏற்றிய பெருமை தமிழக முதல்வர் அவர்களை சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திருமணத் திட்டத்திற்கு தொடக்கத்திலே 20,000 ரூபாய் என்றிருந்தது. அதை படிப்படியாக 60,000 ரூபாயாக உயர்த்தியிருக்கின்றார். இந்த ஆண்டும் இந்தத் திட்டத்தை தொடர தமிழக முதல்வர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

## தெய்வ தரிசனங்களுக்கு ஏற்ற தாய் வீடு தமிழ்நாடு!

### மங்கையர் பாராட்டும் முதல்வர்!

திருவிளக்கு பூஜை: சக்திகள் கொண்டாடுகின்ற இந்த பூஜை. கடந்த 10 ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு முதன்முதலில் குலசேகரப்பட்டணத்தில் 2022 ஆம் ஆண்டு 10 திருக்கோயில்களுக்கு முதன்முதலாக திருவிளக்கு பூஜையை தொடங்கினோம். இன்றைக்கு அந்த பூஜைகள் 20 திருக்கோயில்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக இந்த பூஜையினால் பலனடைந்த சக்திகளினுடைய எண்ணிக்கை 61,020 மகளிர்கள் இந்த ஒரு திட்டத்தால் மாத்திரம் பலனடைந்திருக்கிறார்கள். பெண்களுக்கு பெருமை சேர்க்கும் இந்த ஆட்சியில் 870 அம்மன் திருக்கோயில்களுக்கு இதுவரையில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது இந்த திராவிட மாடல் ஆட்சியில். சுடர் விளக்கை ஏற்றும் திட்டத்தைத் தந்த சூரிய விளக்காம் நம் முதல்வரை நன்றி பெருக்கோடு மங்கையர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

### 23 இராமர் கோயில்களுக்கு குடமுழுக்கு!

குடமுழுக்கு-குடமுழுக்கில் இந்த ஆட்சி ஒரு வரலாற்றையே படைத்திருக்கிறது. அதாவது, குடமுழுக்குகளால் ஆலங்கள் ஜொலிக்கின்றன; அதனால் ஆன்மிக உள்ளங்கள் குளிர்கின்றன. 400 ஆண்டுகளுக்கு பிறகு திருவட்டாறு ஆதி கேசவ பெருமாள் திருக்கோயிலுடைய குடமுழுக்கு, 300 ஆண்டுகளுக்கு பிறகு சாத்தனஞ்சேரி கரியமாணிக்க வரதராஜபெருமாள் திருக்கோயில் குடமுழுக்கு, 200 ஆண்டுகள், 100 ஆண்டுகள் கடந்த பல்வேறு திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்று இந்த நாள் வரையில் ஒட்டுமொத்தமாக நடைபெற்றிருக்கின்ற குடமுழுக்கு 2,820 குடமுழுக்குகள் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு நடைபெற்று கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே ஒரு இராமர் கோயிலுக்கு ஊரெல்லாம் தம்பட்டம் அடித்துக்கொண்ட ஆட்சி உண்டு. ஆனால், இந்த ஆட்சியில் 23 இராமர் கோயில்களுக்கு குடமுழுக்கு எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தமிழ்நாட்டில் நடைபெற்றிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில் குடமுழுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் 3,000-ஐ தாண்டும் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோடிகளில் நடைபெறுகிறது திருக்கோயில் திருப்பணி, பக்தகோடிகளின் மனங்களை



குளிர வைப்பதே இந்த ஆட்சியின் இறைப் பணி. அந்தவகையிலே இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 102 உயர்மட்ட தொல்லியல் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. தொல்லியல் துறை கூட்டங்களில் அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு என்றால், 11,666 திருக்கோயில்களுக்கு இதுவரையில் திருப்பணிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னாள் பேசிய நண்பர், சட்டமன்ற உறுப்பினர் சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள் சொன்னார், தங்களுடைய ஆட்சிக் காலத்தில் அதிகப்படியான திருப்பணிகள் அனுமதிக்கப்பட்டது என்று. இல்லை. 2016 ஆம் ஆண்டு தொடங்கி,

2021 ஆம் ஆண்டு வரையில் நீங்கள் அளித்த அனுமதி 1,122 என்பதை இந்த நேரத்தில் நான் அவருக்கு பதிலாக சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### ரூ. 1,320 கோடி நன்கொடை!

இத்துறையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, இந்தத் துறைக்கு உபயதாரர்கள் நிதி மட்டும் எவ்வளவு வந்திருக்கிறது தெரியுமா? ரூ.1,320 கோடியை நன்கொடையாளர்கள் அளித்து இந்தத் திருப்பணியில் பங்கு பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எதைக் காட்டுகிறது என்றால், அறநிலையத் துறையின்மீது பக்த கோடிகள் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் காட்டுகிறது; இது ஒருபுறம் என்றால், இந்த முதல்வர் அவர்கள் கைக்கு பணம் சென்றால்தான் அது பக்தகோடிகளுக்கு நன்மை செய்யும் என்பதைத் தமிழக மக்கள் அறிந்திருக்கின்றார்கள்.

திருக்கோயிலில் பக்தர்களுக்கு அன்னதானம். நம்முடைய உறுப்பினர் அவர்கள், கடந்த ஆட்சியில் 2 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் கொண்டுவரப்பட்டது என்று பேசினார், ஆம். 10 ஆண்டுகளில் வெறும் 2 கோயில்களில்தான் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, 13 திருக்கோயில்களில் இந்த அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அன்னதானத் திட்டத்தில், முதல்வர் அவர்கள் புகுத்திய பெருமை என்னவென்றால், அதுநாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டமாகும். அதனால், பயனடைந்த பக்தர்களுடைய, பயனாளிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 3 கோடியே 50 இலட்சம் பக்தர்கள் இதுவரையில் இந்த அன்னதானத் திட்டத்தில் பயனடைந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அன்னதானத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டத் தொகை எவ்வளவு தெரியுமா? ரூ.120 கோடி இதுவரையில் இந்த அன்னதானத் திட்டத்திற்கு செலவிடப்பட்டிருக்கின்றது.

அதேபோல், இந்த அன்னதான திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, ஒன்றிய அளவிலே, தமிழ்நாட்டில்தான்,—அதாவது ஒன்றியத்திலே BHOG என்று ஒரு சான்றிதழைத் தருகிறார்கள் சிறந்த அன்னதானத்திற்கு. அந்தச் சான்றிதழை அதிகமாகப் பெற்ற மாநிலம், 520 திருக்கோயில்களுக்கு BHOG என்ற சான்றிதழைப் பெற்ற மாநிலம், அன்னதானத் திட்டத்திற்கு நம்முடைய தமிழ்நாடு (மேசையைத் தட்டும ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### பங்குனி உத்திரத்திற்கு 4 லட்சம் பேருக்கு அன்னதானம்!

கடந்த ஆண்டு அறிவித்தோம், தைப்பூசம், பங்குனி உத்திரத்திலே,—எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னார், தைப்பூசத்திற்கு விடுமுறை அளிக்கப்பட்டது என்று. நாம் விடுமுறையை மாத்திரம் எதிர் கொள்ளவில்லை. வருகின்ற பக்தர்களின் இரைப்பையையும் பார்த்த முதல்வர் எங்கள் முதல்வர் அவர்கள் என்பதால்தான் தைப்பூசத்திற்கும், பங்குனி உத்திரத்திற்கும் 4 இலட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கப்படும் என்று அறிவித்து, இந்த ஆண்டு அதை நிறைவேற்றிக் காட்டியப் பெருமை தமிழகத்தின் அன்னதானப் பிரபு எங்கள் முதல்வர் அவர்கள் என்றால் அந்த வார்த்தை மிகையாகாது.

இப்படிப்பட்ட நிலையில்தான் முதன்முதலில் முதல்வர் அவர்கள் கொண்டுவந்தத் திட்டம்தான், பழனி திருக்கோயிலிலே காலை, மதியம் அன்னதானம் அளிக்கின்ற நிகழ்ச்சி. காலையிலே சிற்றுண்டி, மாலையிலே உணவு அளிக்கப்படுகிறது. இதன்வாயிலாக, ஆகின்ற செலவு ஆண்டுக்கு ரூ.75 இலட்சமாகும். அந்தப் பள்ளி சிறார்கள், இதனால் பயன்படுகின்றவர்களின் எண்ணிக்கை சுமார் 6,000 பேர் ஒரு நாளைக்கு பயனடைகிறார்கள். கல்லூரிகளில் மதிய வேலைத் திட்டத்தைக் கொண்டுவந்துப் புகுத்தியப் பெருமை தமிழக முதல்வர் அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒட்டுமொத்தமாக இந்தத் திட்டத்திற்கு ஆகின்ற செலவு ரூ.6 கோடியே 92 இலட்சம் ஆகும்.

### இராமேஸ்வரம் காசிக்கு ஆன்மீகப் பயணம்!

ஆன்மிகப்பயணம். யார் யாரோ காசி இராமேஸ்வரம் ஆன்மிகப்பயணம் எங்களால் தான் நடைபெறுகிறது என்பார்கள். ஆனால், முதன்முதலில் இராமேஸ்வரம்-காசிக்கு ஆன்மிகப்பயணத்தை அறிவித்த முதல்வர் தமிழக முதல்வர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) காசி-இராமேஸ்வரம் சென்று, காண்போமே சிவனாரை அன்று! என்றார்கள். ஆடியில் அம்மன் அருள் பெறுவோமே! என்றார்கள். புரட்டாசியில் பெருமாளைக் காணுவோமே! என்றார்கள். அறுபடை வீட்டையும் தரிசிக்க ஆன்மிகப் பயணம் உண்டா என்றார்கள். இந்த அத்தனைக் கேள்விக்கும் விடையளித்து, மானசரோவர் மற்றும் முக்திநாத் உட்பட அனைத்துத் திருக்கோயிலுக்கும் ஆன்மிகப் பயணம் அனுப்ப உத்தரவிட்டதன் காரணமாக, 4,953 பக்தர்கள் இதுவரையில் இந்தப் பயணத் திட்டத்தின்கீழ் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மூத்த இறையன்பர்களின் நல்லாசிகளும், ஆதரவும் எங்கள் முதல்வர் அவர்களுக்கு மேலும் மேலும் வளம் சேர்க்கும்.

இங்கே பேசிய நம்முடைய உறுப்பினர் அவர்கள் ஒருகாலப் பூஜைத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்த ஒருகாலப் பூஜைத் திட்டம் நிச்சயம் எங்களுடைய முதல்வர் அவர்களுடைய இந்த ஆன்மிகத்திலே முத்திரைப் பதிக்கும் என்பதில் மாறுபட்டக் கருத்து யாருக்கும் இருக்க முடியாது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றபொழுது, இந்தத் திட்டத்தின்கீழ் 12,950 திருக்கோயில்கள்தான் இருந்தன. இந்தத் திட்டத்திற்கு அரசினுடைய வைப்பு நிதி ரூ.1 இலட்சம் என்று இருந்தது. முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு படிப்படியாக இந்தத் திருக்கோயில்களுடன் மேலும் 5,000 திருக்கோயில்களை இணைத்தார்கள். தற்போது இந்தத் திட்டம் செயல்பாட்டிலுள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை 18,000 ஆகும்.

ஒரு இலட்சம் ரூபாய் என்று இருந்ததை, இரண்டு இலட்சம் ரூபாயாக ஆக்கினார்கள். போதாது, போதாது என்று குரல் கேட்டவுடன் ரூபாய் இரண்டு இலட்சத்தை இரண்டரை இலட்சம் ரூபாயாக ஆக்கிய பெருமை முதலமைச்சர் அவர்களைச் சாரும். அதோடு நிற்கவில்லை. அந்தத் திட்டத்திலே இருக்கிற அர்ச்சகர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான ஊக்கத் தொகையும் இல்லை. முதன்முதலில் அந்த அர்ச்சகர்களுக்கு 18 ஆயிரம் பேர்களுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை அவர்கள் வங்கியில் மாதம் தவறாமல் 18 ஆயிரம் பேர்களுக்கு ஆயிரம் ரூபாய் செலுத்துகின்ற பெருமை எங்கள் முதல்வர் அவர்களைச் சாரும். அதோடு நின்றாரா என்றால், இல்லை, அந்த அர்ச்சகர்களினுடைய குடும்பத்திலே உயர் கல்வியிலே பயிலுகின்ற அந்த மாணவச் செல்வங்களுக்கு ஆண்டுதோறும், பத்தாயிரம் ரூபாய் என்று 900 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை தந்த புண்ணியவான் எங்களுடைய முதல்வர் அவர்கள் என்பதை இந்தத் திட்டத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காக அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு தெரியுமா? ரூ.320 கோடியை அரசு மானியமாக அள்ளித் தந்த முதல்வர் எங்கள் முதல்வர் அவர்கள் என்பதை இந்தநேரத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டங்களால் ஆலயங்களும் ஒளிபெறுகின்றன. அர்ச்சகர்களின் வாழ்வும் சுழல் விடுகின்றன. அவர்தம் பிள்ளைகளும் கல்வி பயில்கின்றனர். இப்படி ஒரே திட்டத்தில் 3 சாதனைகள்.

### கிராமப்புற கோயில்களுக்கு நிதியை வாரி வழங்கிய முதல்வர்!

அடுத்த சாதனை, கிராமப்புறத்திலே இருக்கின்ற ஆதி திராவிடர்கள் திருக்கோயில், கிராமப்புறத் திருக்கோயில்கள் இந்தத் திருக்கோயில் என்பது கடந்த காலத்தில் ஆயிரம் திருக்கோயில்களுக்கு நிதி வழங்கப்பட்டிருந்தது. முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அந்த ஆயிரம் திருக்கோயிலை 1,250 திருக்கோயிலாக மாற்றினார்கள். தரப்பட்டிருந்த நிதி ஒரு இலட்சம் ரூபாய் அந்த திருக்கோயில் திருப் பணிக்கு போதாது என்றவுடன் அதையும் இரண்டு இலட்சம் ரூபாயாக ஆக்கினார்கள். போதாது, போதாது என்று மீண்டும் குரல் வந்தவுடன் அதையும், இரண்டரை இலட்சம் ரூபாயாக ஆக்கினார்கள். இதுவரையில் கிராமப்புறத் திருக்கோயில்கள், ஆதி திராவிடர் திருக்கோயில்களுக்கு 212 கோடி ரூபாயை வாரி வழங்கி பத்தாயிரம் திருக்கோயில்களுக்கு திருப்பணிகளை மேற்கொள்ள செய்திருக்கின்றார் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய முதல்வர் அவர்கள் என்பதை இந்த அவையில் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

### அர்ச்சகர்களுக்கு வீடுகள்!

இந்த ஆட்சி அர்ச்சகர்களுக்கு எதிரான ஓர் ஆட்சி என்ற பிரம்மையை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்வோம், கோயில் நிலம் காப்போம், அதேபோல், கோயிலினுடைய திருக்குளங்கள், குடமுழுக்குகள், திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் நலனைக் காப்பதுபோல் அர்ச்சகர்களுக்கென்று இதுவரையில் 360 அர்ச்சகர் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தந்த ஆட்சி, தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி என்பதை இந்தநேரத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். இதற்கு ஆகின்ற செலவு ரூ.136 கோடி திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

மன்னாதி மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட இராஜ கோபுரங்கள் பல இராஜ கோபுரங்கள் மொட்டை கோபுரங்களாக இருக்கின்றன. அந்த மொட்டை கோபுரங்களையும், இராஜ கோபுரங்களாக ஆக்கிய பெருமை எங்கள் முதல்வர் அவர்களைச் சாரும் என்பதை இந்தநேரத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். மன்னர் ஆட்சிக் காலம் தொடங்கி இன்றுவரை தமிழக முதல்வர் அவர்கள் கட்டிய இந்த இராஜ கோபுரங்களினுடைய எண்ணிக்கை மூன்று நிலை இராஜ கோபுரங்கள் 49, 5 நிலை இராஜ கோபுரங்கள் 35, 7 நிலை இராஜ கோபுரங்கள் 8, 9 நிலை இராஜ கோபுரங்கள் 3 என்று 95 இராஜ கோபுரங்களை ரூ.186 கோடி செலவில் வடிவமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

### மக்களாட்சி கோபுரங்கள்!

நம்முடைய முதலமைச்சர் அவர்கள். சொல்வார்கள், மன்னர் ஆட்சிக் காலம் தொடங்கி கடந்த காலங்கள் வரை கட்டப்பட்ட கோபுரங்கள் மன்னர் ஆட்சிக் கால கோபுரங்கள் என்று. ஆம், இன்றைக்கு மக்களாட்சி நடந்து கொண்டிருக்கின்ற இந்த காலத்தில் தமிழக முதல்வர் அவர்களால் கட்டப்படுகின்ற கோபுரங்களுக்கு ‘மக்களாட்சி கோபுரங்கள்’ என்று வருங்காலம் பெயர் சூட்டும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 1074 கிலோ தங்கம் கிடைத்தது!

தங்க முதலீட்டுத் திட்டம். இந்த திட்டம் என்பது கடந்த ஆட்சியில் மங்கியிருந்த திட்டம். கடந்த பத்தாண்டுகளில் இந்த திட்டம் செயல்பாட்டில் இல்லை. இந்த ஆட்சியில் சாதனை பொங்கி எழுகிறது என்பதற்கு இந்த தங்க முதலீட்டுத் திட்டமே ஒரு சாட்சி. இந்த ஆட்சி வந்தவுடன் கொட்டிக் கிடந்த தங்கத்தை கட்டித் தங்கமாய் சுத்தப்படுத்தினோம். கொட்டிக் கிடந்த தங்கத்தை கட்டித் தங்கமாய் சுத்தப்படுத்தினோம். திருக்கோயிலுக்கு கிடைத்தது, 1,074 கிலோ தங்கம். இதை வைப்பு நிதியாக வைத்த பிறகு அதிலிருந்து கிடைக்கின்ற வருமானம் ரூ.18 கோடி. இந்த ரூ.18 கோடி 21 கோயில்களினுடைய புனரமைப்பிற்கு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**பேரவைத் தலைவர்:** இல்லை, ரூ.18 கோடி என்பது மாதந்தோறுமா, வருடந்தோறுமா என்று சொல்லுங்கள்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** ஆண்டிற்கு ரூ.18 கோடி 21 கோயில்களின் திருப்பணி களுக்குச் செலவிடப்படுகிறது.

நம்முடைய பாரதிய ஜனதா உறுப்பினருக்குத் தெரியும். இந்தத் திட்டம் தொடங்கியபோது அனைத்து திருக்கோயில் வாயிலிலும் ஆண்டவனை அலங்கரித்து வைத்து, அந்த நகைகளை நாங்கள் பிடுங்குவதுபோல் காட்சியளித்து ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்தினார்கள். ஆனால், எங்கள் முதல்வர் அதைப்பற்றி கவலைப்படவில்லை. இந்தத் திட்டம் இறைவனுக்கு சொத்து சேர்க்கிற திட்டம், இதை நடத்துங்கள் என்று உத்தரவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பலன் இந்தத் திட்டத்தில் இப்போது சட்டப் போராட்டம் நடத்தி அத்தனையும் தாண்டி, விமர்சனம் செய்தவர்களிடம் புடம் கோட்ட தங்கமாய் இந்தத் திட்டம் ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டம் மேலும் தொடரும்.

## மலைப்பாக இருந்த பாதை மலைப்பாதையானது! சாலைகள் அனைத்தும் உயர்வானது!

### பெருந்திட்ட வரைவு!

பெருந்திட்ட வரைவு. இந்த பெருந்திட்ட வரைவு என்பது வடமாநிலங்களில்தான் கேட்டுக்கொண்டிருந்தோம். இந்த பெருந்திட்ட வரைவு என்பது தமிழ்நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட முதல் செயல் யாருடைய செயல் என்றால் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். 19 திருக்கோயில்களுக்கு 1,770 கோடி ரூபாய் செலவில் தற்போது இந்த பெருந்திட்ட வரைவு பணிகள் நடந்துகொண்டிருக்கின்றது. பிற மாநிலங்களிலிருந்து ஒருசில கோயில்கள்தான் அடையாளப்படுத்தப்படும். திருப்பதி என்றால் ஆந்திரா என்று சொல்வார்கள். ஆனால், இந்த பெருந்திட்டப் பணி முடிந்துவிட்டால் ஏற்கெனவே இருக்கின்ற தமிழ்நாட்டு கோயில்களோடு சேர்த்து 19 திருக்கோயில்களும் அடையாளப்படுத்தப்படும் என்பதை இங்கே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த பெருந்திட்டப் பணிகள் எங்கள் ஆட்சியில் திட்டமிட்டார்கள் என்று சொன்னார்கள். இல்லை. உங்கள் ஆட்சியில் 14 ஆண்டுகளுக்கு முன்பு HCL நிறுவனம் திருச்செந்தூரிலே பெருந்திட்ட வரைவுப் பணிக்கு அனுமதி கேட்டது. பத்தாண்டு காலம் அதை கிடப்பிலே போட்டீர்கள். அருகிலே இருக்கின்ற பவானியம்மன் பெரிய பாளையத்தம்மன் கோயில் 14 ஆண்டு காலமாக பெருந்திட்ட வரைவுப் பணிக்கு அனுமதி கேட்டார்கள். கிடப்பிலே போட்டீர்கள். எங்கள் ஆட்சி வந்தவுடன் இந்த இரண்டு திட்டங்களுக்கும் அனுமதி தந்து திருச்செந்தூரிலே 440 கோடி, பெரியபாளையத்திலே 180 கோடி என்று பெருந்திட்டப் பணிகள் இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. (குறுக்கீடு) ஆதாரம் இருந்தால் தாராளமாக மறுக்கலாம்.

பேரவைத் தலைவர்: ஏதோ ஒரு சந்தேகம் இருக்கிறது என்கிறார்கள். கேட்டுவிடுங்கள்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: ஆதாரம் இருந்தால் மறுக்கலாம்.

பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம், கேட்டுவிடுங்கள்.

**ஆர்.பி. உதயகுமார்**: அமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையிலே செய்திருக்கிற சாதனைகளை எல்லாம் சொல்லிக் கொண்டே வருகிறார். இதிலே யாருக்கும் எந்த விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், அப்படி சொல்லுகிறபோது பத்தாண்டுகளில் எதுவுமே நடக்கவேயில்லை என்று சொல்கிறார். Comparison சொல்லனும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அப்பொழுதுதான் அந்த அரசினுடைய. . .

**பேரவைத் தலைவர்:** அப்படி பத்தாண்டுகள் எதுவும் நடக்கவில்லை என்று சொல்லவில்லை.

**அவை முன்னவர் துரைமுருகன்:** நான் சொல்கிறேன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) please. மானியக் கோரிக்கையின்மீது, விவாதங்கள் மிகவும் அருமையாக போய்க் கொண்டிருந்தன. திடீரென்று கோயிலில் வேட்டுவைத்தாற்போல், டமால் என்று எழுந்து நிற்பது சரியல்ல. ஆளும்கட்சியாக இருந்தபோது நீங்களும் திட்டங்களை நிறைவேற்றியிருப்பீர்கள், இல்லையென்று சொல்லவில்லை. அவர்கள் ஆட்சியில் அவர்கள் செய்திருக்கிறார்கள். இதில் ஒன்றும் மாற்று கருத்து இல்லை. (குறுக்கீடுகள்)

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** இல்லை, நான் subject-க்குள் செல்லவில்லை. நான் பேச வந்ததை உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள். தடைபட்டிருந்த திருமணத் திட்டத்தைதான் நாங்கள் தொடங்கினோம் என்று சொன்னேனே தவிர, கடந்த காலத்தில் நடக்கவில்லையென்று நான் சொல்லவில்லை. அவரது புரிதல் தவறு.

**பேரவைத் தலைவர்:** அமைச்சர், அவர்களும் நடந்ததை சொல்லிவிட்டார்கள், அதுவும் பதிவு செய்யப்பட்டுவிட்டது, நீங்கள் subject-க்கு வாருங்கள்.

### மானியம் வழங்குவதிலும் ஒரு புரட்சி!

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** திருக்கோயில் நிருவாக செலவினங்களுக்காக மானியம் வழங்குவதிலும் ஒரு புரட்சி, இந்த ஆட்சியில் தான் ஏற்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில், 490 திருக்கோயில்களுக்கு 2021 ஆம் ஆண்டில் ரூ.3 கோடிதான் மானியம் வழங்கப்பட்டது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இதுவரையில் 13 கோடி ரூபாய் கன்னியாகுமரி தேவஸ்தானத்திற்கு மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை நிருவாகத்தில் இருக்கின்ற 225 திருக்கோயில்களுக்கு 1 கோடி ரூபாய் என்று இருந்த மானியத்தை, 8 கோடி ரூபாயாக உயர்த்திய பெருமை, இந்த ஆட்சியைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தில் 88 திருக்கோயில்கள் இருக்கின்றன. அந்த 88 திருக்கோயில்களுக்கு அரசு மானியம் எதுவுமே இல்லை. ஆனால், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், முதலில் 3 கோடி ரூபாய், அதற்கடுத்து 3 கோடி ரூபாய் என்று 6 கோடி ரூபாயை மானியமாக வழங்கி 28 திருக்கோயில்களில் திருவிளக்கு ஏற்றிய பெருமை, இந்த ஆட்சியைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒட்டுமொத்தமாக 803 திருக்கோயில்களில், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, அரசு மானியமாக வழங்கியது 64 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியால் பெற்ற பலன்களைச் சொல்ல வேண்டும். நிதியின்றி தத்தளித்த திருக்கோயில்களைக் கரைசேர்த்த கலங்கரை விளக்கம், எங்கள் முதல்வர் என்பதைப் பெருமையோடு இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தால், திருக்கோயில்களில் ஒரு கால பூஜை காலத்தோடு தொடர்கிறது. திருக்கோயில்களின் திருப்பணிகளும் தொய்வின்றி தொடர்கின்றன. அர்ச்சகர்களும், பணியாளர்களும் பயன்பெறுகின்றனர்.

இந்த அரசு செய்த சாதனைகளில் ஒருசில வற்றைப் பட்டியலிடுகிறேன்.

பெரிது பெரிது கேள் என்றான் பாரதி. ஆம். பெரிது பெரிது புவனம் பெரிது என்றாள் ஔவை. பெரிது பெரிது புவனம் என்றாள் ஔவை. இதோ எங்கள் முதல்வர் அவர்களின் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் ஒரு சில பெரிதுகளைச் சொல்கிறோம்.

வள்ளலார் சர்வதேச மையம் பெரிது; 1,000 ஆண்டு பழமையான திருக்கோயில்

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்